வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 161/2022

வழக்கு சாட்சி LW2 / PW2

| பெயர் | ஏழுமலை | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | குப்புசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 70 |

தேதி 16.09.2025

எதிரி ஆஜர் இல்லை

எதிர் தரப்பில் மனு தாக்கல் 355BNSS பிரிவில் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் பெரிய மாத்தூரில் சம்பவ கோவிலுக்கு எதிரே வசித்து வருகிறேன். நான் பஞ்சாயத்து தலைவராக இருந்ததால் என்னை தலைவர் என்று கூப்பிடுவார்கள். 19.11.2022 அன்று பட்டாச்சாரியார் காலை 09.00 மணிக்கு முன்னர் எனக்கு போன் செய்து அம்மன் கழுத்திலிருந்த தாலி காணவில்லை எனவும், உண்டியல் உடைக்கப்பட்டிருந்ததாகவும் கூறினார். நான் உடனடியாக அவரை காவல் நிலையம் சென்று புகார் அளிக்க கூறினேன். நான் வெளியூரிலிருந்ததால் 12.00 மணியளவில் வந்து பார்த்தபோது நகை காணாமல் போயிருந்தது. போலிசார் விசாரணை செய்தார்கள். 26.11.2022 அன்று திருடிய நபரை பிடித்துவிட்டதாக காவல் நிலையத்தில் கூறினார்கள். காவல் நிலையம் சென்று பார்த்தேன். அவரை முன்னர் பார்த்ததில்லை. தற்போது என்னால் அடையாளம் கூற இயலாது. போலிசார் விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். நான் மட்டும்தான் வெளியூர் சென்றிருந்தேன் என்றால் ஆமாம். போலிசார் நான் வருவதற்கு முன்பே கோவிலை வந்து பார்த்துவிட்டு சென்றுவிட்டார்கள் என்றால் ஆமாம். நான் ஊர்த்தலைவர் என்பதால் கோவிலுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**